# Tamil general flu resource 2021

**“ஃப்ளூ” என்றழைக்கப்படும் சளிக்காச்சலை உண்டாக்கும் இன்ஃப்ளூயன்ஸா கிருமியானது எங்கும் இருக்கக்கூடும். இருமல் மற்றும் தும்மல் ஊடாக இது எளிதாகத் தொற்றும். சாதாரண தடிமனை விட, இன்ஃப்ளூயன்ஸா மிகவும் மோசமானது.**

இந்த சளிக்காய்ச்சல் ஏற்படும்போது, மிகவும் நோய்வாய்ப்படும் வாய்ப்பு சிலருக்கு அதிகமாக இருக்கிறது. அவ்வாறான நபர்கள் யாரென்றால், சிறார்கள், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் முதியவர்கள். அத்துடன், ஆஸ்துமா அல்லது நீரிழிவு போன்ற சில நோய்கள் உள்ளவர்களும்கூட.

இந்த சளிக்காய்ச்சல் உள்ள சிலர், சிறிது காலம் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டிவரும். ஒரு சிலர் இந்த ஃப்ளூ சளிக்காய்ச்சலால் இறந்துவிடுகின்றனர்.

நோய்வாய்ப்பட்டதாக உணராத காரணத்தால், தங்களுக்கு இந்த சளிக்காச்சல் ஏற்பட்டிருப்பது பலருக்கும் தெரியாமல் போய்விடுகிறது. ஆனால், அவர்களால் தொடர்ந்தும் இந்த நோய்த்தொற்றை மற்றவர்களுக்குக் கடத்தி, மற்றவர்களை நோய்வாய்ப்படுத்த இயலும்.

ஒவ்வொரு ஆண்டும் இந்த சளிக்காய்ச்சலுக்கான தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதே உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சிறந்த வழி. சளிக்காச்சலில் இருந்து உங்கள் உடல் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள, இந்த சளிக்காய்ச்சலுக்கான தடுப்பூசி உதவுகிறது. சளிக்காய்ச்சலுக்கான தடுப்பூசி ஒன்றைப் போட்டுக்கொள்வதன் மூலம், நீங்கள் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும், அத்துடன் உங்களைச் சுற்றியுள்ளவர்களையும் பாதுகாக்கிறீர்கள்.

- 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதை உடையவர்களுக்கு, சளிக்காய்ச்சலுக்கான தடுப்பூசி **இலவசம்.**
- கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கு, சளிக்காய்ச்சலுக்கான தடுப்பூசி **இலவசம்.**
- நீரிழிவு, பெரும்பாலான இதய அல்லது நுரையீரல் நோய்கள், மற்றும் வேறு சில நோய்களைக் கொண்ட, 65 வயதிற்குட்பட்ட எவருக்கும் சளிக்காய்ச்சலுக்கான தடுப்பூசி **இலவசம்.**
- ஆஸ்துமா அல்லது பிற சுவாசப் பிரச்சினைகளுக்காக மருத்துவமனையில் தங்கவேண்டி ஏற்பட்ட 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, சளிக்காய்ச்சலுக்கான ஒரு தடுப்பூசி **இலவசம்.**
- சளிக்காய்ச்சலுக்கான ஒரு தடுப்பூசி பற்றி, இன்றே உங்கள் மருத்துவர் அல்லது தாதியிடம் கேளுங்கள். இது உங்களுக்கு **இலவசமாகக்** கிடைக்கக்கூடும்.
- சளிக்காச்சலுக்கான தடுப்பூசி ஒன்றைப் போட்டுக்கொள்ளக்கூடிய உங்கள் கூட்டுக்குடும்ப உறவுகளை, அவர்களது மருத்துவரையோ அல்லது தாதியையோ பார்க்குமாறு ஊக்குவியுங்கள்.
- உடல் நலத்துடனும் ஆரோக்கியமாகவும் இருப்பது என்பது, உங்களுக்கு சளிக்காய்ச்சல் வராமல் தடுக்காது.
- தடுப்பூசியிலிருந்து உங்களால் சளிக்காய்ச்சல் நோய்த்தொற்றைப் பெற முடியாது.
- சிறந்த பாதுகாப்பு வேண்டுமென்றால், ஒவ்வொரு ஆண்டும் குளிர்காலத்திற்கு முன்பு நீங்கள் ஒரு சளிக்காய்ச்சலுக்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**fightflu.co.nz**
**0800 466 863**

The Immunisation Advisory Centre

MINISTRY OF HEALTH
MANATŪ HAUORA

**Treasure our Whānau**

APRIL 2021